# முன்பதிவின் பேரில் சொத்து வரி செலுத்துவதற்காக, அக்டோபர் 20 மற்றும் 21, மீண்டும் நவம்பர் 17 மற்றும் 18, ஆகிய தேதிகளில் ப்ராம்ப்ட்டன் நகர மன்ற அரங்கில் பணி நேரம் நீட்டிப்பு

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 15, 2020) – நகரவாசிகள் மற்றும் வணிகர்கள் தங்கள் சொத்து வரிகளை செலுத்துவதற்காக, பின்வரும் தேதிகளில் நகர மன்ற அரங்கம் தனது பணிநேரத்தை நீட்டித்துள்ளது:

- அக்டோபர் 20 செவ்வாய்
- அக்டோபர் 21 புதன்
- நவம்பர் 17 செவ்வாய்
- நவம்பர் 18 புதன்

நீட்டிக்கப்பட்ட செயல்படும் நேரமானது காலை 8:30 மணி முதல் இரவு 8 மணி வரை இருக்கும். நகர் மன்ற அரங்கிற்கு வந்து சொத்து வரி செலுத்தவிருக்கும், குடியிருப்பாளர்கள் City of Brampton website என்னும் இணையதளத்தில் முன்னதாக தங்களுக்கான சந்திப்பை பதிவு செய்ய வேண்டும்.

நகர சபை அலுவலகங்களுக்கு நேரில் வந்து சேவைகளைப் பெறுவதற்கு முன்பாக சந்திப்புக்கான முன்பதிவு அவசியம் என்பது குடியிருப்புவாசிகளுக்கு நினைவுட்டப்படுகிறது. போகிறபோக்கில் வந்து சேவை பெறுவது அனுமதிக்கப்படுவதில்லை. சந்திப்புக்களுக்கான முன்பதிவினை நகரத்தின் இணையதளத்தில் செய்து கொள்ளலாம், மறு தேதிக்கு திட்டமிடலாம் மற்றும் ரத்து செய்யலாம்.

சொத்து வரி செலுத்துவதற்கு பல பத்திரமான மற்றும் வசதியான மாற்று வழிகள் உள்ளன:

- ஒரு வங்கியில் அல்லது பிற நிதி நிறுவனத்தில்
- நிதி நிறுவனங்கள் மூலமாகம் இணையம்/தொலைபேசி வங்கி வசதி மூலமாக
- காசோலைகள் மூலமாக
- முன் அங்கீகரிக்கப்பட்ட வரி செலுத்தும் திட்டம் மூலமாக

மேலும் தகவலுக்கு, www.brampton.ca ஐப் பார்வையிடவும்.

இந்தக் கடினமான நேரத்தில் குடியிருப்பாளர்களுக்கும் வணிகங்களுக்கும் கூடுதல் நிதி நிவாரணம் வழங்குவதற்காக டிசம்பர் 31 ஆம் தேதி வரை தாமதமாக சொத்து வரி செலுத்துவதன் காரணமான அனைத்து வட்டி மற்றும் அபராதங்களையும் நிறுத்தி வைக்க நகரமன்றம் இந்த மாத துவக்கத்தில் ஒப்புதல் அளித்தது. இந்த சமயத்தில் எந்தவொரு நிலுவைத் தொகையையும் தாமதமாகப் பெறுவதன்

காரணமான கூடுதல் அபராதங்கள் மற்றும் வட்டி ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக, டிசம்பர் 31 க்கு முன்னர் அனைத்து தொகையும் நகரசபைக்கு செலுத்தப்பட வேண்டும்.

சந்திப்புக்கு முன்பதிவு செய்துகொள்ள, அல்லது சொத்து வரி செலுத்துதல் தொடர்பான கேள்விகளுக்கு, தயவுசெய்து 311 ஐ அழைக்கவும் அல்லது 24/7 என்ற அடிப்படையிலான ஆதரவைப் பெற 311 என்ற எண்ணுக்கு அழைக்கவும் அல்லது @brampton.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்l
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் 7 சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca